**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 1921/மாஒ5/IE-Sports/ஒபக/2023, நாள். 29.11.2023**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அனைத்து வகை மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் – மாணவர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை விடுவிக்கக் கோருதல் – சார்பு.

பார்வை : சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2430/ஆ8/IE-Sports/ஒபக/2023, நாள். 22.11.2023.

................

பார்வையில் காணும் சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளதால் தங்கள் பள்ளிகளில் மேற்கண்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்களை அவர்களுக்கான இணைப்பு 1–ல் உள்ள போட்டிகள் விவரப்படி உரிய பாதுகாவலர்களுடன் போட்டியில் பங்கேற்கச் செய்யவும், இணைப்பு 2–ல் உள்ள உடற்கல்வி ஆசிரியர்களையும் பணியிலிருந்து விடுவித்தனுப்புமாறும் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

மேலும் வட்டார வளமையங்களில் பணியாற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சிறப்பு பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிய நேரத்தில் போட்டி நடைபெறும் இடத்திற்கு தவறாமல் வருகைபுரிய ஏதுவாக அவர்களை பணியிலிருந்து விடுவித்தனுப்புமாறு அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**போட்டிகள் நடைபெறும் இடம் – அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி**

**போட்டி நடைபெறும் நாள் மற்றும் நேரம் – 30.11.2023, முற்பகல் 9.30 முதல்.**

29/11/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்,

29/11/23

இணைப்பு –
1. போட்டிகள் விவரம்.
2. உடற்கல்வி ஆசிரியர்கள் விவரம்.

**பெறுநர்:**
1. தலைமையாசிரியர்கள், அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள். (உரிய வழியாக)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்
5. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல்:**
1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6, அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம்.
அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், வேலூர்.
4. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.